DEPOSITION OF WITNESS

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KADALADI. CC–107/2021

Prosecution witness – PW 1

Name : திரு.செந்துூரான் Caste:

Father's Name: Calling:

Village : Religion:

Taluk : Age:

(Accused present)

03.02.2026 – 03.45 PM

முதல் விசாரணை:–

1. நான் ஆப்பனூரில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். எதிரியை தெரியும். பட்டியல் சாட்சிகள் 2 முதல் 4 வரை எனக்கு தெரியும். இரவு 09.00 மணி தேதி தெரியவில்லை. சுமார் 5 வருடத்திற்கு முன்பு எனது மைத்துனர் முருகனும், குருசாமியும் ஆப்பனூர் டீக்கடை முன்பு வைத்து எனது மைத்துனரை அருவாளால் வெட்ட வந்தார். நான் சண்டையை விலக்க சென்றேன். அப்போது அந்த அருவாள் எனது இடது கை கட்டை விரலில் வெட்டி ரத்தக்காயம் ஏற்பட்டு விட்டது.

2. எதிரி குருசாமியும், மைத்துனர் முருகனும் ஒரே வீட்டில் பெண் எடுத்தவர்கள் ஆவார்கள். அவர்கள் இருவருக்கும் இடப்பிரச்சனை தொடர்பாக முன் விரோதம் இருந்தது. அதன் பிறகு கடலாடி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சையில் இருந்த போது போலீசார் என்னை விசாரித்தார்கள். நடவடிக்கை எடுக்க வேண்டி புகார் வாக்குமூலம் கொடுத்தேன். புகார் வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். இது தொடர்பாக போலீசார் விசாரித்தார்கள். போலீசார் விசாரணையில் மேற்சொன்ன தகவல்களை தான் சொன்னேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை: –**

எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Date: 2026.02.03 18:13:21 +0530